ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/34 - 2016 අගෝස්තු මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.11

*1979/34 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 06/2001* (iv)

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குப்படுத்தற் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 94 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கை காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை,
(இலங்கைக் காப்புறுதிச் சபைக்காகவும் அது
சார்பிலும் கையொப்பமிடப்பட்டது).

கொழும்பு,
*2016, யூன் 10.*

விதிகள்

*2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 1642/16 ஆம் இலக்க,* அதி விசேட வர்த்தமானியினால் கடைசியாக திருத்தப்பட்டவாறான *2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 1412/30 ஆம் இலக்க,* அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் இலங்கை காப்புறுதிச் சபை விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*1.* எட்டாம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"*8.* (1) காப்புறுதியாளர் ஒருவரால் பிரதான அலுவலராக நியமிக்கப்படும் ஆளொருவர் -

(அ) சபையால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான கல்வி அல்லது உயர் தொழில் தகைமையை, அல்லது

(ஆ) காப்புறுதி, நிதி "வியாபாரம் ஆகிய துறையில் அல்லது சபையால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வேறு ஏதேனும் விடயத்தில் பத்து வருடங்களுக்கு குறையாத வினைத்திறனான அனுவத்தைக் கொண்டிருத்தல் கொண்டிருத்தல் வேண்டும்."

*2.* காப்புறுதித் தரகர் ஒருவரால் பிரதான அலுவலராக நியமிக்கப்படும் ஆளொருவர் –

(அ) பட்டயம் பெற்ற காப்புறுதி நிறுவனத்தின் இணையுறுப்பினர் அல்லது கூட்டுறுப்பினராக இருத்தல் ; அல்லது சபையால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான சமமான தகைமையைக் கொண்டிருப்பதும் காப்புறுதிக் கம்பெனி ஒன்றில் அல்லது காப்புறுதி தரகுக் தொழில் புரியும் கம்பனி ஒன்றில் நிறைவேற்று மட்டத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத இயைபான அனுபவத்தைக் கொண்டிருத்தல் ; அல்லது

(ஆ) காப்புறுதிக் கம்பெனியொன்றில் அல்லது காப்புறுதி தரகுத்தொழில் புரியும் கம்பெனியொன்றில் நிறைவேற்று மட்டத்தில் பத்து வருடத்துக்கு குறையாத அனுபவமும் அத்துடன் முகாமை மட்டத்தில் ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுமாக பதினைந்து வருடங்களுக்குக் குறையாத இயைபான அனுபவத்தையும் கொண்டிருத்தல் ; அல்லது

(இ) காப்புறுதி கம்பெனி ஒன்றில் அல்லது காப்புறுதி தரகுக் தொழில் புரியும் கம்பெனி ஒன்றில் முகாமை மட்டத்தில் பத்து வருடங்களுக்கு குறையாத இயைபான அனுபவத்தைக் கொண்டிருத்தல், வேண்டும்.

*8- 745*